**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 11** **நாள்: 07.01.2026**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிக்காட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ரூ.3.98 கோடி மதிப்பீட்டில் 2 புதிய திட்டப்பணிகளை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிக்காட்டுதலின்படி, இன்று (07.01.2026) மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன் அவர்கள், துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் ரூ.3.98 கோடி மதிப்பீட்டில் புதிதாக 2 பல்நோக்குக் கட்டடங்கள், அமைப்பதற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர்.

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, இராயபுரம் மண்டலம், வார்டு-56க்குட்பட்ட பிராட்வே சாலை, N-3 முத்தையால்பேட்டை காவல் நிலையம் அருகில் உள்ள ஜீல்ஸ் தெருவில் மாநகராட்சியின் சார்பில் ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பல்நோக்கு மையக் கட்டடப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர்.

இந்த கட்டடம் 657 சதுர மீட்டர் பரப்பளவில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்படவுள்ளது. இதில் தரைத்தளத்தில் அலுவலகம், மருந்தகம், வாகன நிறுத்தம், மின்தூக்கி வசதி, முதல் தளத்தில் சென்னை குடிநீர் வாரிய அலுவலக அறை, கழிப்பிடம், இரண்டாம் தளத்தில் மாநகராட்சியின் சுகாதார ஆய்வாளர் அலுவலக அறை, கழிப்பிடம் ஆகியவை கட்டப்படவுள்ளது.

பின்னர், ஆசிர்வாதபுரம், அம்மன் கோயில் தெரு அருகில் மாநகராட்சியின் சார்பில் ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பல்நோக்கு மையக் கட்டடப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர். இந்த கட்டடம் 496 சதுர மீட்டர் பரப்பளவில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்படவுள்ளது. இதில் தரைத்தளத்தில் வாகன நிறுத்த வசதி, முதல் தளத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அலுவலக அறை, கழிப்பிடம், இரண்டாம் தளத்தில் மாநகராட்சியின் மின்துறை உதவிப் பொறியாளர் அலுவலக அறை, கழிப்பிடம், மூன்றாம் தளத்தில் சுகாதார ஆய்வாளர் அலுவலக அறை, வரி வசூலிப்பாளர் அலுவலக அறை, கழிப்பிடம் ஆகியவை கட்டப்படவுள்ளது.

இந்நிகழ்வுகளில், பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டார ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு), மண்டலக் குழுத்தலைவர் திரு.பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் திரு. வெ.பரிமளம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**